769

காஞ்சி

ஆசிரியர் : அண்ணாதுரை

மலர் 1. இதழ் 48-
சி.வீ. அணங்கண்.
10.7.65.

கேள்வி ? பதில்

(1) டெலிவிஷன் எப்போது கண்டுபிடிக்கப்பட்டது?

ஸ்காத்லாந்தைச் சேர்ந்த **பெயர்ட்** என்பவர் 1925ல் டெலிவிஷனைச் செய்து பரீட்சை பார்த்ததாகத் தெரிகிறது.

(2) வாலிபமாக இருக்க சில பஸ்பம் இருக்கிறதாமே, நல்லதா?

வாலிபப் பருவம் அனைவருக்கும் உண்டே! அந்தப் பருவம் போன பிறகு முதுமையில் வாலிபம் பெற ஏன் முயல வேண்டும்? வாலிபம் தேவை என்றால் கூட அதற்காகக் கண்ட பஸ்பம் மருந்து சாப்பிடுவது கெடுதலையே உண்டாக்கும். வைட்டமின்'சி' உடலில் அதிகம் சேருவதால் வாலிபத்தை அதிகநாட்கள் காத்து வரலாம். இந்த வைடமின் தக்காளியில் நிறையக் கிடைக்கிறது. பஸ்பத்தைவிட இந்தப் பழச் சத்துதான் மேலானது. ஆபத்து இல்லாதது.

(3) அஜந்தா ஓவியங்களைப் பார்த்திருக்கிறீரா? பிரமாதமாக இருக்குமாமே!

பார்த்திருக்கிறேன் — காணத்தக்க ஓவியங்கள் — சந்தேகமில்லை. அஜந்தா குகை சென்று வரச் செலவு அதிகமாகும். ஆனால் அஜந்தா ஓவியம் போன்ற தரமுள்ள ஓவியம், புதுக்கோட்டையில் சித்தன்ன வாசலில் பார்க்கலாம். அஜந்தாவில் ஓவியம் உள்ள குகைகள் 27 உள்ளன. இவைகளை வெட்டிச் செதுக்க 700 வருடங்கள் பிடித்தனவாம்.

(4) கடல் நீரைக் குடிநீராக்கும் பிரச்சினைபற்றி உலக மாநாடு நடக்கிறதாமே; உண்மையா?

ஆமாம்! ஐம்பது நாடுகளிலிருந்து நிபுணர்கள் கூடுகிறார்கள் அமெரிக்காவில் — இந்த மாநாட்டுக்காக. கடல் நீரைக் குடிநீராக்க முடியுமா முடியாதா என்பதல்ல இப்போது ஆராயப்படும் பிரச்சினை. கடல் நீரைக் குடிநீராக்க முடியும் — அவ்விதமான முறையைச் சில இடங்கள் மேற்கொண்டுள்ளன. இப்போது ஆராய்வது அதற்கான செலவை எந்த அளவுக்குக் குறைப்பது என்பதுதான். விஞ்ஞான நுட்பங்கள் வளர வளர செலவு நிச்சயமாகக் குறையும்.

(5) என்ன இருந்தாலும் பெண்ணைவிட ஆடவனுக்குத்தான் அறிவு அதிகம் என்று என் நண்பன் வாதாடுகிறான் சரியா?

உமது நண்பருக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை போலிருக்கிறது. அவரிடம் சொல்லிவையும். உடற்கூறு நிபுணர்கள் ஆடவன் மூளையை விடப் பெண்ணுடைய மூளைதான் எடை அதிகம் என்று கண்டுபிடித்திருக்கிறார்கள்.

(6) சில மரங்கள் மனிதனைவிட உயரமாக வளர்ந்து நீண்டகாலம் வாழ்வதன் கரணம் என்ன?

ஓரிடத்தை விட்டு மற்றோர் இடத்தை நாடிச் சென்று ஆற்றலை வீணில் கழிக்காததுதான் காரணம் என்று பெர்னார்ட்ஷா கூறியிருக்கிறார்.

(7) உடலை வருத்திக்கொண்டு தவம் செய்து உயர்நிலை அடைவது பற்றி என்ன எண்ணுகிறீர்?

உயர்நிலை அடைய முயல்வது நல்லதே; ஆனால் அந்த உயர்நிலை எதற்குப் பயன்படுதல் வேண்டும்என்பதுபற்றித் தெளிவு இருக்கவேண்டும். உயர்நிலை அடைய உடலை வருத்திக்கொண்டாக வேண்டும் என்பதில்லை. உடம்பைப் பேணுவது தேவை என்றே திருமூலர் தெரிவித்திருக்கிறார்.

உடம்பார் அழியில்
உயிரார் அழிவார்
திடம்பட மெய்ஞ்ஞானம்
சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும்
உபாயம் அறிந்தேன்
உடம்பை வளர்த்தேன்
உயிர் வளர்த்தேனே.

என்பது திருமூலர் வாக்கு.

(8) சட்டைகளில் பொத்தான்கள் வைக்கும் பழக்கம் எப்போது ஏற்பட்டது?

இதுபோன்றவைகளுக்கு அறுதியிட்டு உறுதியாகப் பதில் கூறத்தக்க ஆதாரங்கள் நமது நாட்டைப் பொருத்தவரையில், கிடைப்பது கடினம். பிறநாடுகளில் இவை போன்றவைகளுக்கான குறிப்புகளைப் பத்திரப்படுத்தி வைத்துள்ளனர். ஏசு பிறப்பதற்கு 2500 ஆண்டுகளுக்கு முன்பே எகிப்திய மக்கள் பொத்தான்களை உபயோகித்தனர் என்பது அந்த நாட்டுக் கல்லறைகளை ஆராய்ச்சி செய்தவர் கண்டறிந்து கூறுகின்றனர். பொத்தான்களைத் தங்கத்திலே செய்து கொண்டனராம் கிரேக்கர்கள். ஆதிநாட்களில் எலும்பினால் பொத்தான்கள் செய்து உபயோகித்தனராம்.

(9) இந்தியால் தமிழ் கெடுமா என்று கேட்கிறார்கள் — கெடாது என்று நான் சொல்லுகிறேன் என்கிறாரே காமராஜர் — நம்புவதா, கூடாதா?

நம்புவதா கூடாதா என்பது இருக்கட்டும். இந்தியால் தமிழ் கெடுமா கெடாதா என்பதை இவரிடம் யார் கேட்டார்கள்? மொழி நிபுணர்களிடம் கேட்டார்கள், அவர்கள் கெடும் என்று பதில் அளித்திருக்கிறார்கள்.

(10) இறைச்சித் தொழில் பற்றி கசாப்புக் கடை என்று கேவலமாகப் பேசினார்களே காங்கிரஸ் மந்திரிகள் — இப்போதும் அதே கருத்திலேதான் இருக்கிறார்களா?

நல்ல முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது அவர்களின் கருத்தில் — நாலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் பன்றிப் பண்ணைகள் வைத்து பன்றி இறைச்சித் தொழிலை நடத்தத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

★

அட்டைப்படம்.

கற்பனை உரையாடல்

மண்டலம்:- நமஸ்ந்தே, முதலாளி! நமஸ்த்தே......

தொழிலதிபர்:- ராம்! ராம்! வாங்கோ வந்தேமாதரம்! நமர்கு ஏன் இவ்வளவு மரியாதை செய்யணும்...

ம:- இலட்சுமி கடாட்சம் பெற்றவரல்லவா, மரியாதை காட்டாமல் இருக்கலாமா...

தொ:- என்ன இலட்சுமியோ, என்ன சரசுவதியோ போங்க மண்டலம்! எவனைப் பார்த்தாலும் வெறுப்பாப் பேசறான்...... எதிர்த்துப் பேசறான்......

ம:- விவரம் தெரியாததுகள் பேசும் ....வாய்க்கு என்ன பூட்டா சாவியா...பேசுவதன் பொருளைத் தெரிஞ்சாப் பேசறான் அவனெல்லாம்...

தொ:- வெட்டி ஆளுங்க வேணது பேசட்டும் மண்டலம்! கவலை இல்லே, நம்ம ஐயாவே பேசறாரே, மனசு என்னா பதறுது தெரியுமா.

ம:- எந்த ஐயாவைச் சொல்றிங்க முதலாளி!

தொ:- நம்ம 'பெரியவரை'த்தான் சொல்றேன்......காம்ராஜ் ஐயாவைத்தான்.....முதலாளிகளை ஒழித்துவிடப்போகிறேன் என்கிறாரே...

ம:- பேப்பர்காரன் போட்டதைப் பார்த்திங்களா......அதை அப்படியே நம்பிவிட்டிங்களா...

தொ:- நாட்டுக்குத் தலைவரு பெரியவரு, அவர் பேச்சை நம்பாம இருக்கலாமா...

ம:- ஏன் அதுபோலப் பேசினாரு.... என்னா நோக்கம்....என்னா அர்த்தம்னு தெரியுமா...

தொ:- பச்சையாகத்தானே பேசி இருக்காரு முதலாளிகளை ஒழித்துப் போடறேன்னு...

ம:- சூட்சமம் தெரியாததாலே சும்மா திகில்படறிங்க முதலாளி! முதலாளி! ஓட்டு வைத்திருக்கிற பயலுங்க காதுக்கு இனிப்பாப் பேசணும்...ஜனநாயகம்! ஜனங்க நாக்கிலே தேன் தடவணுமே..... அதுக்காக அப்படிப் பேசறது...

தொ:- இவரே அப்படிப் பேசிவிட்டா, மற்ற ஆளுங்க, மத்த கட்சிக்காரனுங்க இன்னும் சாரசாரமாத்தானே ஏசுவானுங்க...

ம:- அவனுங்க பேச்சை அடக்கத்தானே 'அவர்' பேசறாரு அதுபோல......முதலாளிகளை நானே ஒழிக்கப்போகிறேன், நீங்க எதுக்காகடா குதிக்கறதுன்னு கேட்கறாரு பெரியவரு! புரியுதா, முதலாளி!!

தொ:- புரியுது மண்டலம், நீ பேசறபோது, ஆனா திகிலாவும் இருக்குது......

ம:- என்ன திகிலு! பெரியவரே முதலாளிகளை ஒழித்துவிடுவார்னா...

தொ:- சும்மாப் பேசிப்பேசி கடைசியிலே அவருக்கே அப்படி ஒரு எண்ணம் வந்துவிட்டா...

தொ:-அய்யோ! அய்யோ! உனக்கு ராஜதந்திரம் தெரியலையே முதலாளி......

தொ:- அப்படின்னா ஆபத்து ஒண்ணும் வராது என்கிறயா, மண்டலம்...

ம:- ஆபத்து இல்லை என்பது மட்டுமில்லா முதவாளி! அதிர்ஷ்டமே வரப்போகுது...புதுசா ஒருபெரிய அச்சாபீஸ் வைத்திருக்கிங்க, இல்லையா...

தொ:- நாம வைக்கல்லே, மண்டலம். ஒருபாவிப்பய வாங்கிட்டுப் போன கடனைக் கொடுக்கல்லே ...இதைத்தான் கொடுத்தான்... தங்கம் கொடுத்தேன் மண்டலம்! பய, இரும்பைத் தலையிலே கட்டிட்டுப் போயிட்டான்...காட்பாடி பக்கம் போயிட்டானாம்...கட்டை வியாபாரமாம்...

ம:- கட்டை வியாபாரமாவது செய்யட்டும், முட்டைக்கடையாவது வைக்கட்டும். நான் சொல்ல வந்தது என்னன்னா நம்ம அச்சாபிசிலே ஆறு இலட்சம் புஸ்தகம் —64 பக்கம்சொண்டது, அடிக்க 'ஆர்டர்' வரப்போகுது—பெரியவரு உங்களிடம்தான் கொடுக்கச்சொன்னாரு.

தொ:- ஆறு இலட்சம் புஸ்தகமா... . மகாத்மா சரித்திரமா...

ம:- இல்லே முதலாளி! இது ஜனநாயக சோஷியலிசம் என்கிற விஷயம்...

தொ:- முதலாளி ஒழியணும், அதுதான் சோஷியலிசம்னு சொல்ற புஸ்தகந்தானே...

ம:- அது, மத்த பயலுக பேசற சோஷியலிசம்...நம்ம பெரியவரு பேசற சோஷியலிசத்திலே, முதலாளிகள் உண்டு, தாராளமா இருக்கலாம்......அவர்தான் அடிச்சி கேட்கறாரே, முதலாளி இல்லையானா, தொழிலாளிக்கு எவன் வேலை குடுப்பான்னு...

தொ:- அப்படியா! அதெல்லாம் வருதா புஸ்தகத்திலே...ஆறு இலட்சமா......போடணும் போடணும்...

ம:- மூணு கலர் அட்டை! பளபளன்னு மின்னணும்......பொன் கலரிலே எழுத்து......அட்டையிலே......பின்பக்கம் ஒரு விளம்

தொ:- தெரியும்.....தெரியும்...... புள்ளைங்க மூணுக்குமேலே கூடாதுன்னு விளம்பரம்...அதானே...

ம:- அது உள்ளாலேயே வருது... புஸ்தகத்திலேயே...நான்சொல்ற விளம்பரம், புதுசா அனுமினிய கம்பெனி ஆரம்பமாகியிருக்குதே அதைப்பத்தி...

தொ:- சர்க்கார்லே இப்படி புதுசு புதுசா கம்பெனிவைத்தா, நாங்க என்ன தொழிலைச்செய்துபிழைக்கறது மண்டலம்...

ம:- சர்க்கார் தொழில்னு யார் சொன்னது? பெரியவரு போயிருந்தார்னு கேள்விப்பட்டு அப்படி எண்ணிக்கொண்டிருக்கிங்க...... கம்பெனி பெரிய முதலாளியுடையது, முதலாளி! எவ்வளவு தெரியுமா முதலு? 14-கோடி...

தொ:- 14 கோடி ரூபா முதல் போட்டா, புதுசா கம்பெனி...

ம:- முதலாளிகள் இப்படி தொழில் நடத்த ஏற்பாடு செய்ற நம்ம சர்க்காரா முதலாளியை ஒழிக்கும்னு திகில் உனக்கு. என்னா முதலாளி! உனக்கு விவரம் புரியமாட்டேங்குது...

தொ:- இப்பப் புரியுது மண்டலம்! மனசு நிம்மதியாச்சி...சோஷியலிசம்னு பேர் இருக்கறதாலே ஒரு குழப்பம், பயம்...

ம:- பேரைக் கண்டே பயப்படலாமா...பேர் எதுவா இருந்தா

என்னா முதலாளி! முதலாளி! நம்ம பங்காளி இருக்காருனே தெரியுமேல்லோ...

ம:- எந்தப்பங்காளியைச் சொல்றே மண்டலம்......உங்க பெரியப்பாவோட...

ம:- அட நான் அந்தப் பங்காளியைச் சொல்லல்லே...நம்மோட போட்டி போட்டானே மண்டலக் காங்கிரசுக்கு...

தொ.- அடெடே! வராகசாமி!

ம:- அவனேதான்! வராகம்னு என்னு அர்த்தம்தெரியுமா? பன்றி!

தொ:- சேச்சே! அப்படியா அர்த்தம்...

ம:- அந்த அர்த்தத்தைச் சொன்னு ஒத்துக் கொள்வானு...

தொ:- எப்படிச் சொல்றது மண்டலம்! கோபமில்லவா வரும்...

ம:- அதுதான் சொல்றேன் ...... பேருக்கெல்லாம் அர்த்தம் பார்க்கக்கூடாதுன்னு உங்கிட்ட இருக்கருனே ஒரு பய, காவக்காரன், அவன் நொண்டி! பேர் என்னு அவனுக்கு? தாண்டவராயன்! தாண்டருனு பய...

தொ:- வேடிக்கை வேடிக்கையாப் பேசறே மண்டலம். நீ சொல்லச் சொல்லத்தான் புரியுது எனக்கு ...நம்ம கடையிலே குப்பை கூட்ருளே ஒரு பொண்ணு...

ம:- கட்டையா, கருப்பா ஒருத்தி...

தொ:- அவளேதான்...அவ பேரு... செவப்பி...

ம:- அதைக் கவனத்திலே வைத்துக் கொள்ளு முதலாளி! அப்ப உனக்கு நம்ம பெரியவரு பேசற சோஷியலிசத்தைப் பத்தி திகில் வரவே வராது...விளம்பரம்?

தொ:- போட்டுக்கலாம் மண்டலம் ...கொஞ்சம் 'ரேட்' நல்லதாப் போடு...

ம:- ரேட்டா! விளம்பரத்துக்கா! முதலாளி! அதுநமக்காகப் போட வேண்டியது ... இனும்தான்...... ஆறு இலட்சம் புஸ்தகம் ஆர்டர் கொடுக்கறதுக்கு இது செய்யக் கூடாதா...

தொ:- உனக்கு ஆயிரம் செய்யலாம் மண்டலம் ... விளம்பரம் பெரிய கம்பெனிக்கு......பணத்துக்கு என்னு குறைச்சல் கம்பெனிக்கு...

ம:- கம்பெனி, பெரிய தொகை நன்கொடை கொடுக்குது, எனக்கு...50 வயதாகுதே!...விழா

தொ:- புரியுது, புரியுது மண்டலம் ...சந்தோஷமாச் செய்யறேன்... புஸ்தக 'ரேட்டு' கொஞ்சம் தாராளமா...

ம:- அதை நான் கவனித்துக் கொள்ள மாட்டனு?

தொ:- ஆமாம், மண்டலம். நாம ஒருத்தருக்கு ஒருத்தர் துணையா இருந்தாத்தானே நல்லது... ❋

தித்திக்கும் செய்தி!

காஞ்சி

ஆண்டு மலர்-1965

ஜூலைத் திங்களில் வருகிறது.

மற்றும்
சுவையும் பயனும் மிக்க
கட்டுரைகள், கதைகள், கவிதைகள்.
எழுத்தாளர் பலர் தீட்டிடும்
எண்ணற்ற எழுத்தோவியங்கள்.
இவற்ருேடு

அண்ணு
அளித்திடும்

★ தழும்புகள்
★ அம்பாள் கடாட்சம்
★ சமதர்மமும் சர்வேஸ்வரனும்
★ மடல்

.. முதலிய கருத்தோவியங்கள்!

தேவைகுறித்து உடனே தெரிவிக்கவும்.

விலை ரூ. 1-00

காஞ்சி

மலர் 1 11—7—65 இதழ் 48

ஒரே கேள்வி

திருப்புகழ்

திருப்புகழ் பாடுகின்றனர், திருக்கூட்டத்தார், காங்கிரசாட்சிக்கு. அணைகளைக் காணீர்! அணிகளைப் பாரீர்! எழில் மாடங்கள் காணீர்! தொழிற்கூடங்கள் பாரீர்! ஒளிவிளக்குகள் காணீர்! ஒயிலான காட்சிகளைப் பாரீர்!—என்றெல்லாம் திருப்புகழ் பாடுகின்றனர். பொலிகாளைக் கணக்கிலிருந்து பொறுக்குவிதைக் கணக்குவரை எடுத்துக் கூறுகின்றனர், எக்களிப்புடன்.

இஃதன்றோ அரசு என்பாரும், உண்டோ இதற்கு ஈடு எனக்கேட்போரும், கைத்தாளமிட்டுக் களிநடமிடுவோரும், இருக்கின்றார்கள்! பரந்த உலகம்; பற்பல இருந்திடும்!!

விவசாயத்திலே வளர்ச்சியாம், தொழிற்துறையிலே முன்னேற்றமாம், செல்வம் குவிந்தபடி உளதாம், சீர்மிகுந்திடும் நிலையாம்—எல்லாம் காங்கிரசின் ஆட்சியினால் கிடைத்திடுபவையாம் — கதைத்திடுகின்றனர்.

கூட்டுப் பண்ணைமுறை முதற்கொண்டு குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம்வரை, மரம்நடுவிழா முதற்கொண்டு எருக்குழித்திட்டம் வரையில், கடல் வாணிபம் முதற்கொணடு கடன்தரும் திட்டம்வரை,—திட்டங்கள் பலப்பல தீட்டி அவர் தீட்டுகின்றார் புது வண்ணம், ஓட்டுகின்றார் வறுமை நோயை, காட்டுகின்றார் சமதர்மம் என்று திருப்புகழ் பாடுகின்றனர்.

திருக்கூட்டத்தார் பாடிடும் திருப்புகழ்கேட்டு, தித்திககிறது! தித்திக்கிறது! தேனினும் இஃது தித்திககிறது! என்று பொதுமக்கள் கூறிடுவர், கொடி தூக்கிடுவர், கொற்றம் பணிந்திடுவர் என்று எண்ணுகின்றார்கள். ஆனால்......!

இந்தக் கிழமையில் மட்டும், ஆட்சியிலுள்ளார் அறிவித்துள்ள 'தோல்வி'களின் பட்டியலைப் பார்த்திடின், இவர்தம் திருப்புகழ் பொருளற்றது :என்பதனை உணர்ந்திடலாம்.

காவடிச் சிந்து!

இவர்தம் திருப்புகழ் ஆராய்ந்து பார்ப்போருக்கு; ஒருவித காவடிச் சிநதாக இருப்பது புரிந்திடும். ஆட்சியில் அமர்ந்துள்ளவர்களின புகழ்பாடினால், பொன்னும் பொருளும் குவிததிடத்தக்க 'வாய்ப்பு' கிடைத்திடும், ஆட்சியினரைப் பாராட்டிடும் முறையில் சிந்து அமைத்து, அதனை ஆளவந்தார்கள் முன் இசைத்துக் காவடி தூக்கினால், பெட்டி நிரம்பி வழியும் என்று எண்ணிக்கொள்கின்றனர். அதற்கே—காவடிச் சிந்தாகிடும் திருப்புகழ் பாடுகின்றனர்! எமது நலன் பாதுகாத்திடுவீர்!! என்று கசிந்துருகிக் கேட்டு நிற்கின்றனர்.

தற்புகழ்ச்சி கூடாது, கழுகேனும் செத்ததைக் கொத்திடும், தற்புகழ்ச்சியோ உயிரோடு இருந்திடும் போதே கொத்திடும்—இதனை நன்கு உணர்ந்தவர்கள், ஆட்சியாளர்களின் ஆதரவினைப்பெற, பல்லெலாம் தெரியக்காட்டி, பருவிரல் முகத்தில் கூட்டி, சொல்லெலாம் தேனேபெய்து நின்றிடுவதுகண்டு பாராட்டிடமாட்டார்கள்.

இந்த ஆட்சி, மக்களின் வாழ்வு செம்மைப்படுத்தப்படுவதற்கான முயற்சியை மேற்கொள்ளவேண்டும்; மேற்கொண்டிடும் முயற்சி பயன்தந்திடின், திருப்புகழ்பாடிடலாம்; தேவையுங்கூட! ஆனால் முயற்சிகள் முறிந்திடுகின்றன, முனை மழுங்கிப்போகின்றது, குறி தவறிவிடுகிறது, மக்கள் வாழ்வு வறுமைக் குழியிலே தள்ளப்படுகிறது; தத்தளிக்கின்றனர்; எனினும் திருப்புகழ் பாடுகின்றார் திருக்கூட்டத்தார் எனின், பொருள் என்னவாக இருக்கமுடியும்? காவடிதூக்கிச் சிந்துபாடி 'கனம்'களின் கண்பார்வை தம்மீது வீழ்ந்திடுமா, அதன் காரணமாக 'வரம்' கிடைத்திடுமா என்று எண்ணுகின்றனர் என்பதுதானே!

திருவாய்மொழி

அமைச்சர்களும், அவர்களை ஆட்டிப்படைத்திடும் தலைவர்களும் திருவாய் மொழிந்திடுகின்றனர் — முன்னேற்றம்! முன்னேற்றம்! எல்லா முனைகளிலும் முன்னேற்றம்! என்று, களிநடமிடுகின்றனர். தாம்மேற்கொண்டுள்ள திட்டம்பற்றி விரிஉரையாற்றுகின்றனர், மக்கள் அந்தத் திட்டத்தின்பயனாக, என்னென்ன பெறப் போகிறார்கள்; என்ற விவரம் தராமல், விளக்கம் உரைத்திடாமல். ஆனால் அல்லலையும் தொல்லையையும் பட்டுவரும் மககளோ ஆளவந்தார்களின் திருவாய்மொழி, அடிவருடிகளின் காவடிச் சிந்து, திருக்கூட்டத்தின் திருப்புகழ் என்பவை யாவுமே பொருளற்றன, பயனற்றன என்று உணர்ந்து ஓலமிட்டபடி உள்ளனர்.

குறள்

உறு பசியும் ஓவாப் பிணியும் செறு
பகையும் சேராதியல்வது நாடு

என்று வள்ளுவர் கூறியுள்ளார். இந்தக் குறள் காட்டிடும் நிலையிலா ஆட்சியாளர் நாட்டினை வைத்துள்ளனர்? இல்லையே! இந்நிலையில், செவியில் வீழ்ந்திடும் திருப்புகழும் காவடிச் சிந்தும் திருவாய்மொழியும் எங்கனம் இனிப்பளித்திடும்.

தோல்வி, பல முனைகளில் ஆயினும் வெற்றி மாலையும் வீரக்கழலும் எமககே அளிததிடவேண்டும் என்று கேட்கின்றனர் காங்கிரசார். கருத்தில் தெளிவுள்ள மக்கள் இதற்கு ஒப்புவரோ? ஒப்புபவர் கருத்தில் தெளிவுள்ளோர் என்ற இலக்கணத்துக்கு உரியவராவரோ! 1967-ல் உள்ள கேள்வி இதுவே!

தம்பி

பயில்வான் வீட்டுக்காளை

பார்த்தாயா இந்தப் பொல்லாத ஆசாமி நாஞ்சில் மனோகரன் செய்துவிட்டுள்ள வேலையை—துணிச்சல் அதிகம்—காங்கிரசின் பெரிய தலைவரை—பெரியவர் என்றுதான் அவரைப் புகழ்பாடிகள் அழைக்கிறார்களாம்'!—காமராஜரை ஒரு சிக்கலான சங்கடத்தில் சிக்கவைத்துவிட்டிருக்கிறார். இதழொன்றில் பார்த்தேன்—காமராஜரின் பிறந்தநாள் விழாவுக்காக என்று சொல்லித் திரட்டுகிறார்களே பத்து இலட்சரூபாய், அந்தத் தொகையை இந்தியாவை உருட்டி மிரட்டியபடியும் இந்திய எல்லைப் பகுதியை விழுங்கி ஏப்பம்விட்ட நிலையிலும் உள்ள சீனப் பகைவர்களை முறியடிப்பதற்கான நல்ல காரியத்துக்காக நன்கொடையாகக் கொடுத்துவிடவேண்டும் என்று ஓர் யோசனை வெளியிட்டிருக்கிறார். யோசனையா அது! வெடிகுண்டு தம்பி! பயங்கரமான வெடிகுண்டு! எந்த இலட்சங்களை நம்பிக் காங்கிரசார் சல்லடம் கட்டிக்கொண்டு தேர்தல் களத்திலே குதித்திடலாம் என்று துணிவைப் பெற்றிருக்கிறார்களோ, எந்த இலட்சங்களைக்கொண்டு ஏழை எளியோர்களுக்கு ஆசாபாசம் ஊட்டி, அவர்கள் மனதிலே குமுறிக்கொண்டிருக்கும் வெறுப்பு, எதிர்ப்பு, அருவருப்பு ஆகிய உணர்ச்சிகளை உருக்குலையச்செய்து ஓட்டுகளைத் தட்டிப்பறித்து மீண்டும் தர்பார் நடத்தலாம் என்று ஆசையாக உள்ளனரோ, எந்த இலட்சங்களைத் திரட்டிக் காட்டுவதன் மூலமாகவே எதிர்க்கட்சிகளை மிரட்டிவிடலாம் என்று எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்களோ, காங்கிரசாவது இந்த முறை தேர்தலிலே வெற்றி பெறுவதாவது என்று அய்யப்பாடும் அச்சமும் கொண்டுள்ளவர்களை எந்த இலட்சங்களைக் குவித்துக்காட்டி, தைரியம்கொள்ளச் செய்யலாம் என்று எண்ணிக்கொண்டிருக்கிறார்களோ, அந்த இலட்சங்களை, நாட்டை எதிரியிடமிருந்து மீட்டிடும் நல்ல காரியத்துக்காகக் கொடுத்துவிடுங்கள் என்று கூறிவிட்டிருக்கிறார்! ஆத்திரம் அலைஅலையாக அல்லவா எழும், பணம் திரட்டிச் செலவிட்டு மீண்டும் பட்டாபிஷேகம் செய்துகொள்ளலாம் என்று தவமாய்த் தவம் இருக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கு. எதை எதையோ எடுத்துக்காட்டியும், ஏதேதோ வாக்குக்கொடுத்தும், அமைச்சர்கள் ஊரூர் அலைந்தும், மிட்டா மிராசையும் செல்வவான்களையும், கெஞ்சியும் கொஞ்சியும் திரட்டும் பத்து இலட்சத்தை, அப்படியே கொடுத்துவிடச்சொல்கிறார் நாட்டை மீட்டிடும் நல்ல காரியத்துக்கு. இப்படியா ஒரு இக்கட்டான நிலைமையை இந்தத் தம்பி ஏற்படுத்தி காங்கிரசின் பெரிய தலைவர்களைச் சங்கடத்திலே சிக்கவைப்பது!!

நாட்டுக்கு இன்றுள்ள பேராபத்தான நிலையையும் அந்த நிலைமையை மூட்டிவிட்டுள்ள பகைவர்களை முறியடிக்கவே அவரவரும் தத்தமக்குக் கிடைத்திடும் பொருளையும் உழைப்பினையும் தந்திடவேண்டும், அஃதே உண்மையான நாட்டுத்தொண்டு என்பதனையும் எவரும் ஒப்புக்கொள்வார்கள்.

விருந்தும் வீண் ஆரவாரமும், விழாவும் வேடிக்கையும் வேண்டாம், நேரமும் நினைப்பும் பணமும், இன்று இம்முறையிலே பாழ்படவிடக்கூடாது; பகைவன் உறுமியபடி இருக்கிறான், அவனை



ஜெக் கிஷோர்,

A. சாந்தமேரி,
A. கிருஷ்ணவல்லி,

775

விரட்டியடித்திடவே பணம் அவ்வளவும் பயன்படவேண்டும், மற்ற எல்லாக் காரியங்களையும் பிறகு கவனித்துக் கொள்ளலாம் என்று ஊருக்கு உபதேசம் செய்த காங்கிரஸ் பெரிய தலைவர்கள் ஒரு பெரியவரின் பிறந்த நாள் என்பதன் பேரால் திரட்டிடும் இலட்சங்களை, உத்தமமான காரியத்துக்கே செலவிடல்வேண்டும் என்று யோசனை கூறும்போது, அதனைத் தவறான யோசனை என்றோ தகாத திட்டமென்றோ தள்ளிவிட முடியாது; ஊர் கேலி செய்யும், நாட்டை மீட்டிடும் நல்லகாரியத்துக்காக அந்தப் பெரியவர் பெயர் கூறித் திரட்டப்படும் பெரிய தொகை தரப்படுவது அவருக்கே கூடப் பெருமை தருவதாகவே அமையும்; உலகு போற்றிப் புகழ்ந்திடும்; அய்யமில்லை! ஆனால், தேர்தல்? வருகிறதே பெரியதோர் புயல்! வஞ்சகத்தை வீழ்த்திடவல்ல புயல்! வன்கணார்களை விரட்டியடித்திடக்கூடிய புயல்! வரிமேல் வரிபோட்டு வாட்டத்தை மூட்டிவிட்ட ஆட்சியாளர்களை அகற்றிடும் வேகம்கொண்ட புயல்! அந்தப் புயலினால் வீழ்ந்து படாதிருக்க, எந்த இலட்சங்களை நம்பிக்கொண்டிருக்கிறார்களோ அந்தத் தொகையை நாட்டுப் பாதுகாப்புக்காகத் தந்துவிட்டால், பிறகு பதவிப் பாதுகாப்புக்கு என்ன செய்வது! பண பாணம் வேண்டும், பதவியை மீண்டும் பெற்றிட! அந்தப்பணத்தை வேறோர் காரியத்துக்கு—அது எத்தனை உயர்வானதாக இருந்தாலும்—செலவிட்டு விட்டால், பதவியைப் பிடித்திடும் வழி அடைபட்டுப் போய்விடுமே! வெகு எளிதாகச் சொல்லிவிட்டாரே—இவருக்கு என்ன தெரியும் அந்த இலட்சங்களைத் திரட்டிட நாங்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் வகையும் அளவும்! பத்துஇலட்சம் என்றால் சாதாரணத் தொகையா!. எத்தனை பேர்களிடம், என்னென்ன சொல்லிக் கேட்டுப் பெற்றது அந்தத் தொகை, அதனைத் தேர்தலுக்காகவா பயன்படுத்துவது, நாட்டைக் காத்திடும் பணிக்காகப் பயன்படுத்த வேண்டும், அதுதான் முறை, அதுதான் அறம் என்று பேசுகிறாரே இந்தக் கழகத்துக்காரர்—இது வேண்டுமென்றே பொதுமக்களைக் கிளப்பிவிடுகிற தந்திரப் பேச்சல்லவா—ஏன் இந்தப் பக்தவத்சலம் காண்டிபத்தைத் தூக்காமல் இருக்கிறார்—இந்தக் கழகத்துக்காரர்களை வெளியே விட்டுவைத்தாலே ஏதேனும் பேசி நம்மை வம்பிலே சிக்கவைத்து விடுவார்கள்—எதற்காகத்தான் இருக்கிறது பாதுகாப்புச் சட்டம்!—என்றெல்லாம எண்ணுவர் காங்கிரஸ்காரர்கள் — பிறந்த நாள் நிதியை நாட்டுக்காகக் கொடுத்துவிடச் சொல்லியது கேட்டு. பொல்லாத ஆசாமி, ஓசைப்படாமல் வீசுகிறார் காங்கிரசாரின் ஆசைக் கோட்டையினைத் தகர்த்திடவல்ல ஒரு வெடி குண்டெடுத்து.

ஒவ்வொரு நாளும் பத்துப் பேருக்குச் சாப்பாடு இலவசமாக! மருத்துவத்துக்குப் பணம்! கல்விக்குப்பணம்! துணிமணிகளுக்குப் பணம்! நந்தவனப் பாதுகாப்புக்குப் பணம்! இவ்வளவும் எமது 'தர்ம ஸ்தாபனத்தின்' மூலம் நடந்துகொண்டிருக்கிறது என்றார் ஒரு முதியவர். அந்தச் செய்தி கேட்டவர் பூரித்துப்போனார், பொருள் தேடிப் பெறுவதே மற்றவர்களின் இன்னலைத் தீர்க்கத்தான்! அறம் செய விரும்பு என்ற ஆன்றோர் மொழிக்கு ஏற்ப நடந்துவரும் தங்கள் பெருமையைப் பாடிட நான் கவிவாணனாக இல்லையே என்றே கவலைப்படுகிறேன்! பத்துப் பேருக்கு ஒவ்வொரு நாளும் உணவளிக்கிறீர்! உண்டி கொடுப்போர் உயிர் கொடுப்போரே! ஜீவாத்மாக்களைக் காப்பாற்றுவதைக் காட்டிலும் மேலான முறை ஏதும் கிடையாது பரமாத்மாவை வழிபட! உமக்கு இம்மையில் புகழ், மறுமையில் தேவ பதவி, நிச்சயம் கிடைத்திடும். உண்டி தருகிறீர்! வந்துற்ற நோயையும் தீர்க்கின்றீர்! கல்விச் செல்வமும் அளிக்கின்றீர்! உமது கருணையே கருணை!'' என்று புகழ்ந்துரைத்துவிட்டு, "பத்துப் பேர் என்கின்றீரே, இன்னின்னார் என்று ஏதேனும், ஜாதி மதம் நிலை என்ற முறை உண்டோ?'' என்று கேட்டார். இல்லை!'' என்றார் தர்ம ஸ்தாபனக்காரர். "அப்பதின்மர் ஒவ்வோர் நாள் வேறு வேறோ—ஒரு பதின்மரே ஒவ்வோர் நாளுமோ'' என்று விளக்கம் கேட்டார். தர்ம ஸ்தாபனத்தார்,'' "அப்பதின்மர் வேறு யாருமல்ல, நாங்கள் அண்ணன் தம்பிகள் மூன்று பேர், எமது துணைவியர் மூவர், எமது பிள்ளைகள் இருவர், அவர் மனைவியர் இருவர், ஆக மொத்தம் பதின்மர்'' என்று விளக்கமளித்தார்.

எந்த ஊரில் உளது இந்த விந்தை அமைப்பு என்று கேட்கின்றனையோ, தம்பி! எடுத்துக் காட்டுக்காகக் கூறினேன்—கற்பனைதான்! அவ்விதமான தர்மம்' உண்மையான அறமாகாதன்றோ! அதுபோல, ஒரு கட்சியின் தேர்தல் செலவுக்காகப் பயன்படுத்தத் திரட்டப்படும் பணம், ஒரு பெரியவரின் பிறந்த நாள் நிதி என்ற பெயர் பெறுவது பொருத்தமில்லையே; பொருளுமில்லையே; பெருமையும் அளிப்பதாகாதே! அஃது சோறு சமைக்க அடுப்பை மூட்டிவிட்டு, அதனை வேள்வித்தீ என்று கூறுவது போலன்றோ இருக்கிறது. ஏன் இந்தக் கேவலம்? காமராஜருக்குப் பெருமை வரத்தக்க முறையில், அவருடைய பிறந்த நாள் நிதி என்று திரட்டிடும் பெருந்தொகையை, பொதுநலம் தரத்தக்க சீரிய காரியத்துக்குச் செலவிடுக! என்று கூறுகிறார்—அதனைத் தவறு என்று வாதாடி மெய்ப்பிக்க முடியாது. நாட்டுப் பாதுகாப்புக்கான காரியம்; தேர்தல் வேலையைவிட முக்கியமானது என்பதையும் எவரும் எளிதில் மறுத்துவிட முடியாது; ஆனால், ஒப்புக்கொள்வார்களோ காங்கிரஸ்காரர்! எந்தப் பெரியவரின் பெயர் கூறி, அவருடைய பிறந்த நாளுக்காக என்று குறிப்புக் காட்டிப் பணம் திரட்டப்படுகிறதோ, அந்தத் தொகையை நாட்டுக்கான நல்ல காரியத்துக்குக் கொடுத்துவிடுங்கள் என்று அந்தப் பெரியவரே கூடச் சொல்லுவாரா!' அவரா!.

> அத்தகைய இயல்பு உள்ளவராக அவர் இருப்பவரானால் எனக்கோ மனைவி மக்கள் இல்லை; என் அன்னையார் மட்டுமே உள்ளார், மூதாட்டியார்; ஆகவே எனக்கு மாதச் சம்பளம் 1000, 1500; என்ற அளவு எதற்கு? தேவையில்லை; தருமமுமாகாது என்று கூறிவிட்டிருப்பாரே! கூறினாரோ!!

ஆகவே, மனோகரன் பேசியது நியாயந்தான் என்று அவர்கள் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஓங்காரக் கூச்சலிட்டுக் கூறுவார்கள், தேர்தல் செலவுக்குப் பணம் வேண்டாமோ! பாவிகளே! உங்கள் தொல்லையைத் தாங்கிடப் பணம் வேண்டாமோ!! என்று.

தேர்தல்செலவுக்காக என்று இத்தனை பெருந்தொகை தேவைதானா—அதுவும் ஒரு ஆளுங் கட்சிக்கு,—என்ற கேள்விக்கு என்ன பதில் அளிப்பார்களோ தெரியவில்லை.

தேர்தலிலே அதிகமான அளவு பணம் செலவிடப்படுகிறது என்றும், அதன் காரணமாக ஜனநாயகமே கேலிக்கூத்தாக்கப்படுகிறது என்றும், தேர்தல் செலவைக் குறைத்திட வழிவகை கண்டாக வேண்டும் என்றும் அறிவாளர்கள் கூறிவருகின்றனர்.

இந்த நிலையில், காங்கிரஸ் கட்சி இத்தனை இலட்சங்களைத் திரட்டுகிறது. தேர்தல் நிதியாக!

ஏன் இத்தனை பெரிய தொகை?

> தேர்தல் செலவுக்காகத்தான்?
>
> தேர்தல் செலவு என்றால், எந்தவகையான செலவு?
>
> **தேர்தலுக்கான பிரசாரச் செலவுதான்!!**

இப்படித்தான் பதில் அளிப்பர் சற்று பொறுப்புணர்ந்த காங்கிரசார்—பொங்கி வழிந்திடுபவைகள் ஏதேதோ போல போலவென உதிர்த்திடும்.

தேர்தல் பிரச்சாரம்—ஆளுங் கட்சி தன் சாதனைகளை மக்களிடம எடுததுக் கூறிடுவது — வேறென்னவாக இருக்க முடியும்.

இதனை ஒரு ஆளுங் கட்சி தனியாகத் திட்டம் போட்டுக்கொண்டு, தனியாகப் பணம் செலவழித்துச் செய்திட வேண்டிய அவசியமே எழவில்லை.

சர்க்காரின் செய்தித் துறை பெரிய செலவில் அவ்வப்போது, சர்ககாரின் திட்டங்கள் பற்றியும், சாதனை குறித்தும், அழகழகான, வழவழப்பான பளபளப்பான ஏடுகளை வெளியிட்டு வழங்கியபடி உள்ளன. படங்கள், கண்கவரும் விதத்தில். பொலிகாளையைத் தடவிக் கொடுத்த நிலையில் ஒரு மந்திரி! மக்காச் சோள மணியை வாயில் போட்டுக்கொள்ளும் நிலையில் மந்திரி! மல உரக் குழி திட்டத் துவக்க விழாவில் மந்திரி! மார்கழி மாத பஜனைக்கூட ஆண்டு விழாவில் மந்திரி கூடைமுடைவோருடன் மந்திரி! குத்துவிளக்கு ஏற்றும் நிலையில் மந்திரி! கயிறு திரித்திடும் தொழிற்கூடத்தில் மந்திரி!—இவ்விதம் படங்கள், பக்கத்துக்குப பக்கம் இந்த வெளியீடுகளில்.

இதழ்களும், அமைச்சர்களின் பவனி, பயணம், பேச்சு எதனையும் சிந்தாமல் சிதையாமல் வெளியிட்டபடி உள்ளன.

வானொலியும், அமைச்சர்களின் அறிவுரைகளை அறைகூவலை, பரப்புவதில் தனித் திறமை காட்டுகிறது.

படக்கொட்டகைகளில் ஒவ்வொர் நாளும், சாதனைகள் பற்றிய காட்சிகள் — உருண்டோடும் வெள்ளம் — அதிலே வீழ்ந்து வேதனைப்படும் மக்கள் — அதனைக் கண்டு கண்ணீர் வடித்திடும் மந்திரி — அதுபற்றிய உருக்கமான பேச்சு, நித்த நித்தம்! பாலைவனம் சோலைவனமாகிறது. ஆங்கு பசுங் கிளிகள் இசை பயிலுகின்றன—படக் காட்சியில்.

ஒவ்வொரு நாளும் ஒரு திறப்பு விழா! ஒவ்வொர் திறப்பு விழாவும் ஒரு பிரச்சாரக் கூட்டம்!!

இவ்வளவு நடைபெறுகிறது, சர்க்கார் பற்றிய செய்தி அறிவிப்பு என்ற பெயரால் — ஆளுங்கட்சிக்கு ஆதரவான பிரசாரம்.

இவ்வளவுக்குப் பிறகும் தனியாகச் செலவிட்டுத் தேர்தல் பிரசாரம் தேவைதானா — அதிலும் இத்தனை பெரிய தொகை — பத்து இருபது இலட்சங்கள் — அந்த பிரசாரத்துக்காகத் தேவையா! பேசுபவர்கள் வார்த்தைகளை வீசப் போகிறார்களா — அல்லது பொற்காசுகளை வீசப்போகிறார்களா!! ஏன் இத்தனை இலட்சங்கள்.

எதிர்க்கட்சிகளுக்கு இந்த வசதிகளும் — வாய்ப்புகளும் இல்லை — கிடைத்திட வழி இல்லை. சர்க்காரின் வெளியீடுகளும், வானொலியும் எதிர்க் கட்சிகளுக்கு எட்டாக் கனிகள். இதழ்களோ, பட்டும் படாமலும் சில நாட்கள் சிறிதளவு செய்திகளை வெளியிடுகின்றன—இதற்கே பாவம், பெரிய இடத்தின் சீற்றத்தால் தாக்கப்படும் நிலை

எதிர்க் கட்சிகள் தமது கருத்தினை மக்களிடம் எடுத்துக் கூறிடும் முயற்சியில் எதிர் நீச்சலிடும் முறையில் ஈடுபடவேண்டி இருக்கிறது. ஆளுங்கட்சிக்கு இதுவா நிலைமை''

> பொதுப் பணத்தில் ஆளுங் கட்சி தன் பிரசாரத்தை மும்முரமாக நடத்திக் கொண்டபடி இருக்கிறது.

தம்பி! ஒரு இதழில் பார்த்தேன், யாரோ ஒருவர் மெத்தக் கவலையுடன் கேட்டிருக்கிறார். இது முறைதானா, அரசியல் அறம்தானா எனறு.

> திருமதி. இந்திராகாந்தி அவர்கள் சத்தியமூர்த்தி பவனில், காங்கிரஸ் ஊழியர்களுக்காக நடத்திய கூட்ட நிகழ்ச்சியையும்,
>
> திரு. காமராஜரின் பிறந்த நாள் விழாவைக் காங்கிரஸ் கட்சி கொண்டாடிய நிகழ்ச்சியையும் வானொலியில் விரிவாக ஒலி பரப்பியது, அரசியல் அறமா, முறையா என்று கேட்டிருக்கிறார்,

முறையற்ற விதமாகவெல்லாம்கூட, தமது கட்சிப் பிரசாரத்தை பொதுப்பணத்தைச் செலவிட்டு நடத்திக்கொள்ளத் துணிவும் வாய்ப்பும் இருக்கிறது ஆளுங் கட்சிக்கு. இவ்வளவுக்குப் பிறகும், தனிச் செலவிட்டு, தனியாகத் திட்டமிட்டுப் பிரசாரம் செய்திட வேண்டுமா! ஏன்? அவ்வளவு தேவைப்படுகிறது பொய்யை மெய்யாக்க! மக்களை மயக்கிட!! கழகம் மக்களிடம் எடுத்துரைத்திடும் கருத்தினை மறுத்திட!! பத்து இலட்சம்—தம்பி! இது முதல் தவணை! இன்னும் பலப் பல இலட்சங்கள் குவித்திடப் போகிறார்கள்—குவித்தாக வேண்டும்—கழகம் இவர்களை இலேசாகவா வேலை வாங்கப் போகிறது! இளிப்பதை இப்போது முதல் தொடங்கியாகி விட்டது—இனி 1967 தேர்தல் முடிகிற வரையில் இவர்களுக்கு இதேதான் வேலை!,

> இந்த இலட்சணத்தில் ‘பெரியவர்’ முழக்கமிடுகிறார், கழகம் கலகலத்து விட்டது! ஓடி ஒளிந்துகொண்டார்கள்! என்பதாக, ஆமாம்! ஐயா! ஆமாமாம்! என்கிறார்கள் அடிவருடி மடி தடவிடுவோர்.

கொள்கையை விட்டுவிட்ட கழகம்—கோழைகள் உள்ள கழகம்—தடுமாறித் திரிந்திடும் கழகம்—கட்டுப்பாடற்ற கழகம்—குட்டையைக் குழப்பும் கழகம்—இவ்விதம் இந்தப் பெரியவர்களே பேசுகிறார்கள்! இந்தவிதமான குளறலைப் பேச்சு என்கிறார்கள்—பேருரை என்கிறார்கள் — தம்பி! தம்பி! இதற்கு அறிவுரை என்று கூட விளம்பரம் செய்கிறார்கள்.

ஆண்டு பல கார்த்திருந்து முதலமைச்சர் ஆகியுள்ளவர் இருக்கிறாரே பக்தவத்சலனார், அவர் சென்ற கிழமைதான் தூத்துக்குடியில் பேசியிருக்கிறார்—ராஜகோபாலாச்சாரியார் கழகத்திடம் தூக்குக் கயிறு கொடுத்துவிட்டிருக்கிறாராம்; அதிலே மாட்டிக்கொண்டு கழகம் தன்னாலே ஒழிந்துவிடப் போகிறதாம்!

இவ்விதம், அலட்சியப்படுத்தத்தக்க, அடிப்படை அற்ற; கொள்கையற்ற; கோழைததனம் உள்ள கழகத்தை எதிர்த்துத் தேர்தலை நடத்த பத்து இலட்சம்!! புரிகிறதா தம்பி! இந்தக் கேலிக் கூத்து!

> இரும்புக் கவசம் போட்டுக்கொண்டு, இடுப்பில் குத்துவாள் செருகிக்கொண்டு, கரத்திலே உடைவாள் ஏந்திக்கொண்டு, காற்றெனப் பறந்திடும் புரவிமீது அமர்ந்து களம் நோக்கிச் செல்கிறான் வீரன்! செல்லு முன் சொல்லுகிறான், “பகைவன் படுகிழம்! கட்கம் தூக்கிடும் வலிவுமற்றவன்! பாதை தெரிந்து நடந்திட முடியாது. விழி பழுதானவன்!” என்று. பகைவன் இத்தகையவன் என்றால் அவனை எதிர்த்திட இத்தனை ‘முஸ்தீப்பா’ என்று கேட்டுக் கைகொட்டிச் சிரித்திடுவாரன்றோ!

காங்கிரசார், கழகத்தை மிகக் கேவலமாகக் கூறிக் கொண்டே, அதனை எதிர்த்து நிற்க, தேர்தலுக்கு இரண்டாண்டுகளுக்கு முன்பே பலப் பல இலட்ச ரூபாய்களைத் திரட்டுவது கண்டு விவரமறிந்தோர் கைகொட்டிச் சிரித்திடத்தான் செய்கின்றனர்; அது காங்கிரசின் பெரிய தலைவர்களின் செவியிலே விழவில்லை—பணம் சேரச் சேர காதும் கேட்காதாம், கண்ணும் தெரியாதாமே!!

ஒரு பெரிய புள்ளியிடம் பணம் கேட்கச் சென்றபோது அவர் கேட்டே விட்டாராம்; கழகம் கலகலத்துவிட்டது. கொள்கை இல்லை, கோழைத்தனம் மிகுந்துவிட்டது. மக்கள் அதனை மதிப்பதில்லை என்றெல்லாம் ‘தலைவர்’ கூறுகிறாரே, அவர் விவரம் தெரியாமலா பேசுவார், பொய்யா பேசுவார்; அப்படிப்பட்ட கழகத்தை எதிர்த்து நிற்க எதற்காக இவ்வளவுபணம்! என்று திரட்ட வந்தவர், குரலைத் தாழ்த்தி. “அது பிரச்சாரப்பேச்சு! உண்மையில் கழக வலிவு வளர்ந்தபடி இருக்கிறது; நாம் தவறான கணக்குப் போடக்கூடாது” என்று அந்தப் பெரிய புள்ளியே உன்னிடம் சொன்னாரா அண்ணா’ என்றுதானே கேட்கிறாய் தம்பி! அவரிடம் பேசும் நிலையிலும் இடத்திலுமா நான் இருக்கிறேன்; அந்தப் பெரிய புள்ளியின் மோடார் ஓட்டும் தோழன் மூலம் கேள்விப்பட்டேன்.

> கழகம். அத்துணை வலிவுள்ளது என்ற உண்மையை ஒப்புக்கொள்ளக் காங்கிரஸ் தலைவர்களுக்கு அச்சமாகவும் இருக்கிறது கூச்சமாகவும் இருக்கிறது எனவேதான் கழகம் எமக்கு ஒரு பொருட்டல்ல என்று ஓரோர் சமயம் கதைக்கிறார்கள்.

கழகம், உண்மையில் வலிவற்றது, மக்களின் ஆதரவை இழந்தது, என்றால், ஒரு ஆளுங் கட்சி, இன்னமும் மகாத்மாவின் பெயர் கூறி மக்களை மயக்கிடும் வாய்ப்பை இழந்துவிடாத நிலையில் உள்ள கட்சி, தேர்தலுக்காக இத்தனை முன்னேற்பாடுகளையா மும்முரமாகச் செய்துகொண்டிருக்கும், இத்தனை இலட்சங்களையா திரட்டிக்கொண்டிருக்கும்!! பேதையும் இதனை ஏற்கமாட்டானே! அறிவுத் தெளிவுள்ள தமிழக மக்களா இதனை ஏற்றுக்கொள்வார்கள்.

இதனைச் சுட்டிக் காட்டுவதற்காகவே மனோகரன், திரட்டியுள்ள இலட்சங்களை நாட்டுப் பாதுகாப்புக்கான நிதியாகக் கொடுத்துவிட்டு, உமது கட்சியின் சாதனைகளை மக்களிடம் எடுத்துச் சொல்லி ‘ஓட்டு’க் கேளுங்கள் என்கிறார்.

மக்களிடம் பாவம் அவர்கள் எந்தச் சாதனையைச் சொல்வார்கள்!

> உணவுப் பிரச்சினையை தீர்த்துவிட்டோம் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கிவிட்டோம் தொழிலாளர் துயரம் துடைத்துவிட்டோம்.

எள்று கூறமுடியுமா — எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தாலும் கூறமுடியாதே! ஆக. சாதனைகளைக் காட்ட முடியாத நிலையில் என்ன செய்ய முடியும்! நோட்டுகளைக் குவிக்கிறார்கள் ஓட்டு வேட்டைக்காக!! அந்த நோட்டை நாட்டுக்குக் கொடுத்துவிட்டு, ‘ஓட்டு’க் கேட்க வாருங்கள் என்று சொல்லும்போது கோபம் கோபமாகத்தானே வரும் காங்கிரஸ்காரர்களுக்கு.

மக்களிடம் தமது சாதனைகளைச் சொல்லி ஓட்டு வாங்கமுடியும் என்ற நம்பிக்கையுடன் காமராஜர் அதற்கான பலமுறைகளையும் செய்துபார்த்தாகிவிட்டது, பலிக்கவில்லை.

> பாகல்மேடு திட்டம்.
>
> பாதயாத்திரைத் திட்டம்.

நினைவிலிருக்கிறதா, தம்பி! கிராமம் கிராமமாகச் செல்வது மரத்தடியில் மாநாடு! கிராமத்து மக்களைக் கேட்பது, உங்களுக்கு என்ன குறை? என்ன வேண்டும்? என்று. அவர்கள் தங்கள் தேவைகளைத் தெரிவித்ததும் உடனே. அந்த இடத்திலேயே அதற்கான உத்திரவுகளைப் போட்டுவிடுவது பிரச்சினையைத் தீர்த்துவிடுவது. இதுதான் பாகல் மேடு திட்டம். பாகல் மேடு என்ற சிற்றூரில் காமராஜர் நடத்திக் காட்டிய விளம்பர மிக்க நடவடிக்கை. அடே அப்பா! அதற்கு இதழ்களில் என்னென்ன விதமான வர்ணனைகள் படங்கள், பாராட்டுகள்!! ஆனால் நடைபெற்றது என்ன? பாகல் மேட்டோடு பாகல் மேட்டுத் திட்டம் முடிந்துவிட்டது. தொடர்ந்து நடைபெறவில்லை.

பிறகு பாதயாத்திரை! அமைச்சர்களும் தலைவர்களும் கிராமம் கிராமமாகக் கால் நடையாகச் செல்வது. கால் நடை என்றால் என்னமோபோல இருக்கிறது என்பதாலே இதழ்கள் ஒரு சிறப்புப் பெயர் சூட்டின, பாதயாத்திரை என்று. அமைச்சர்கள் பாதயாத்திரையைப் பாதி யாத்திரை ஆக்கிக் கொண்டனர், ஊர் எல்லை வருகிற வரையில் படகு போன்ற மோடாரில் பயணம், எல்லையிலே காரை நிறுத்திவிட்டு, ஊருக்குள்ளே நடந்து பயணம்; மறு எல்லை வந்ததும் மோடார்; இப்படிப் பாதி யாத்திரையாக்கிவிட்டனர், அதுவும் தொடர்ந்து நடைபெறவில்லை; பயன் இல்லை.

பிறகு ‘இளைஞர் காங்கிரஸ்’ அமைத்தனர் — காங்கிரசில் புதிய இரத்தம் பாய்ச்ச! இளைஞர் காங்கிரஸ் திறப்பு விழாக்கள் — மாநாடுகள் — ஊர்வலங்கள் — முழக்கங்கள் — அடிதடி கலகம் — அவ்வளவும் நடைபெற்றன. பிறகு அதனாலும் பயன் இல்லை என்று கண்டுகொண்டனர். முதியவர்களே இளைஞர்கள் ஆகிவிட்ட விந்தைதான் நடந்தது; இளைஞர் காங்கிரசில் இளைஞர்கள் சேரவில்லை.

பிறகு மண்டலக் காங்கிரஸ் திட்டம் வகுத்தனர்; தீவிர மெம்பர் திட்டத்தை இணைத்தனர், அந்தத் திட்டம் மும்முரமாக வேலை செய்த நேரத்திலேதான், தம்பி: கழகம் 15 இடங்களிலிருந்து 50 இடங்கள் என்ற அளவுக்கு வளர்ந்தது.

இவ்விதமாகப் பலப் பல திட்டங்கள் போட்டுப் பார்த்து, பலன் தராதது கண்டு, இப்போது பணம் திரட்

டும் திட்டம் போட்டிருக்கிறார்கள். இதனைத் தகர்த்திட முனைந்து—அதற்காக ஒரு யோசனையும் சொன்னால், அவர்களுக்கு எப்படி இருக்கும்! கண்கள் கோவ்வையாகின்றன.

ஆனால் தம்பி! இந்தப் பணம் திரட்டும் திட்டமும் பலிக்கப் போவதில்லை; நீ மட்டும் விழிப்புடனிருந்தால், எழுச்சி குன்றாமல் பணி புரிந்தால்.

இந்த முறை வெளிப்படையாகச் சொல்லுகிறார்கள். விளம்பரக் கோலத்துடன்—பணம் திரட்டுவதாக. ஆனால் போன தேர்தலில் பணம் திரட்டாமலில்லை. ஏராளமாகப் பணம்! அவர்கள் கொடுத்த கணக்கின்படியே பெரிய கம்பெனிகளிடமிருந்து நன்கொடையாகப் பெற்ற தொகை மட்டும் 98 இலட்சம். ஆகவே இந்தப் பண பாணமும் புதிது அல்ல! ஜனநாயக உணர்வு வளர வளர இந்தப் படைக்கலன் கூர்மழுங்கிப் போய்விடக் கூடியது.

> செல்வாக்கு சிதைந்து வரும் நிலையில் ஒரு கட்சி. பணம் சேர்த்து புதிய பலம் பெற நினைப்பது. ஆடிக் கெட்ட முதியவன் ஆசை அடங்காததால் தங்க பஸ்பம் சாப்பிடுவதற்கு ஒப்பானது. முறுக்கு ஏறும்! வேகமாக!! அதைவிட வேகமாக முறுக்கு தளர்ந்துவிடும். முறிந்தே கூடப் போய்விடும்.

இவ்வளவு பணம் குவித்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தியைக் கேள்விப்படுவோர்கள். நாளையத்தினம் தேர்தல் சம்பந்தமான வேலைக்காகத் தலைவர்கள் அழைத்திடும் போது, தாவிக் குதித்து வரமாட்டார்களா, பச்சை நோட்டை நீட்டுங்கள், பணி செய்வதைப் பாருங்கள் என்று! தன்னலமற்ற பணியா நடைபெறும்! எதற்கெடுத்தாலும் பணம்! ஒன்றுக்கு ஒன்பதாகச் செலவு! ஒரே வேலைக்கு ஒன்பது ஆள்! பல வேடிக்கைகள் நடைபெற இருக்கின்றன.

கழகத்தை ஒழித்துக் கட்டிவிடுகிறேன் என்று காமராஜரே கூறிவிட்டார் என்று பேசுகிறார்கள் — அந்த 'ரே'வுக்கு என்ன பொருளோ தெரியவில்லை அவர் என்னமோ இதுநாள் வரையில் கழகம் வளரட்டும். வாழட்டும் என்று கூறிவந்தவர் போலவும், இப்போதுதான் அதனை ஒழித்துவிடும் எண்ணம் அவருக்கு முளைத்திருப்பது போலவும் பேசுகிறார்கள்; பொருளற்ற பேச்சு.

ரே' என்பதிலேயும் எந்தவிதமான தனிச் சிறப்புப் பொருளும் இருப்பதாக எனக்குப் படவில்லை அவருடைய ஆற்றல் திடீலென பெருக்கெடுத்து ஓடத் தொடங்கிவிட்டதாகவும் நான் கருதவில்லை,

தேர்தல் வேலையைச் சுறுசுறுப்பாகக் கவனிப்பதில். பணம் இருக்கும் இடத்தைக் கண்டறிவதில், திரட்டுவதில் அவருக்கு எப்போதும் தனித் திறமை உண்டு.

திறமையைவிட, இன்று ஏற்பட்டுள்ள நிலை. பணம் திரட்டுவதற்குச் சாதகமாக அமைந்திருக்கிறது.

எட்டு ஆண்டுகள் அமைச்சராக இருந்திருக்கிறார்—முதல் அமைச்சராக — இப்போது முதல் அமைச்சருக்கு மூக்கணாங் கயிறு போட்டு நடத்திச் செல்வதாகச் சொல்கிறார்கள்—இந்த நிலையில் பணம் திரட்டுவதிலே கஷ்டம் என்ன ஏற்பட முடியும். பணம் கொடுக்க முடியாது என்று கூறி அவரைப் பகைத்துக்கொள்ள யார் விரும்புவார்கள்—அதிலும் சர்க்காரின் தயவினாலேயே 'கனதனவான்' ஆனவர்கள்!

இந்த எட்டு ஆண்டுக் காலத்தில், எத்தனை எத்தனை புதிய புதிய தொழிற்கூடங்கள் அமைத்துள்ளனர் முதலாளிகள்.

சென்ற கிழமைகூட 14-கோடி ரூபாய் மூலதனம் கொண்ட அலுமினிய தொழிற்சாலைதுவக்கி அதன் அதிபர் வெங்கடசாமிநாயுடு அவர்களைப் பாராட்டினார்களே!

முதலாளிகள் இத்தனை புதிய புதிய தொழிற்சாலைகள் நடத்தி இலாபம் குவித்திட சர்க்காரின் துணையின்றி முடியுமா, கடன், மானியம், அன்னியச் செலாவணிக்கான அனுமதி, யந்திர இறக்குமதிக்கான அனுமதி, இவ்வளவும் சர்க்கார் தருகிறது; இந்த சர்க்காரை நடத்தியவர் காமராஜர். எட்டு ஆண்டுகள்—அவருடைய பிறந்த நாள் நிதி என்றும் சொல்லி, இவ்விதமாக முதலாளிகளை வாழச் செய்யக்கூடிய சர்க்கார் அமைத்திடும் காங்கிரசின் தேர்தல் செலவுக்காக என்றும் சொன்னால், எந்த இலாப வேட்டைக்காரன். பணம் தர முடியாது என்று கூறிடும் மடத்தனத்தைக் காட்டிக்கொள்வான்: ஆகவே அள்ளிக் கொடுக்கிறார்கள். இதைப்பெற தனித்திறமையா தேவை!! தம்பி' :மனக்கண்ணால் பாரேன். பணம் திரட்டக் கையாளப்படும் முறைபற்றி தம்பி! வாயேன் என்னோடு பெரியவர் வீட்டுக்கு.

வெளியே பார்த்தாயா பெரிய மோட்டார் — அமெரிக்க மோட்டார் — இறக்குமதி செய்ய அனுமதி இல்லை இங்கு—ஆனால் சீமான் — பெயர் எதற்கு' இதை வாங்கினார்—ஒரு இலட்சத்திற்குப் பத்தாயிரம் குறைவு, விலை. கார்த்துக்கொண்டிருக்கிறார். பெரியவரைக்காண;

பெரியவர். வெறும் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவராக இருந்தபோது, இந்தச் சீமான் இப்படிக் கார்த்துக்கொண்டிருந்தாரா? மரம் பழுத்த பிறகுதானே தம்பி! வௌவால் வரும். வந்திருக்கிறார்

பெரியவர் குளித்துக்கொண்டிருக்கிறார் — தெரியவில்லையா—வேலையாள் பரபரப்பாக. மடிப்பு கலையாத வேட்டி சட்டைகளை வைத்துக்கொண்டு நிற்கிறானே, 'பய பக்தியுடன் புரிகிறதல்லவா!!

கூடத்திலே அமர்ந்திருப்பவர்? ஒரு அமைச்சர்!

வருகிறார் காமராஜர்—எழுந்திருக்கிறார் அமைச்சர்—உட்காரச் சொல்லி கைகாட்டுகிறார் காமராஜர்.

நீயும் நானும் அமைச்சரும் கொஞ்சநேரம் கார்த்திருக்கவேண்டும்—ஐயா காலைச் சிற்றுண்டி சாப்பிடுகிற வரைக்கும்!

விற்பனையாளர்களுக்கு

'காஞ்சி' ஆண்டு மலர் விலை ரூ 1—00. தேவையான பிரதிகட்கு 25 % கழிவு நீக்கி முன்பணம் 15-7-65க்குள் அனுப்பவேண்டும். தவிர ஜூன் மாத பட்டியல் தொகை பூராவும் உடன் அனுப்பிவைக்கவும்.

உரிமையாளர்,
'காஞ்சி'

முடிந்தது—பேசுகிறார்கள் கேட்போம்.

"எதுக்காக பார்க்கணுமாம்,"

'சிமிட்டி தொழிற்சாலை விஷயமாத்தான்...''

"நல்ல கொள்ளையாமே சிமிட்டியிலே, ஒரே பிளாக் மார்க்கட்டாம். இல்லாமலா அத தேப்பெரிய கார் வாங்கியிருப்பான்...சரி...நீ என்ன சொல்றே..''

'ஆள் நல்லவன்தான்... கொஞ்சம் அழுத்தம்''

"அப்படியானா ஒரு அஞ்சாறு தடவை இழுத்தடிக்கணும்.. ...''

'தேவையில்லே. பார்லிமென்ட் சீட் ஒண்ணும் நாலு M. L. A. சீட்டும் அவனிடம் பொறுப்பா ஒப்புவித்துவிடலாம்''

'நம்பலாமா...பின்னாலே கையை விரித்து விடுவானா...''

"அப்படிச் செய்யமாட்டான்...''

''சரி, வரச்சொல்லு...''

சீமான் வருகிறார்! சிரிப்பு! பேச்சு! மகிழ்ச்சி! புரிகிறதல்லவா!!

தம்பி! வேறோர் ஊர் போவோமா, வேறோர் காட்சி காண.

இதோ இவர்தான் மண்டலம்: ஆட்சித் தலைவர் சுற்றுலா மாளிகையில் வந்திருக்கிறார், பார்த்துவிட்டு வந்திருக்கிறார் மண்டலம். அவரோடு போய் வருவோமே.

மாளிகை பெரிது என்கிறாயா! ஆமாம்! இதுபோல மூன்று இங்கு. ஊட்டியில் ஒன்று; கோடைக்கானலில் ஒன்று விலை பேசிக்கொண்டிருக்கிறார்; கோடீஸ்வரர், பெயரா? அதுவா முக்கியம்! இலட்சுமி புத்திரன் என்று சொல்லுகிறார்கள்.

''யாரு, மண்டலமா? வாய்யா, டெலிபோன் செய்தது நீதானா...''

"ஆமாம்...நீங்க வெளியே பொறப்படறதுக்குள்ளே முக்கியமான விஷயம் சொல்ல வேண்டி இருந்தது.''

"உனக்கு எல்லா விஷயமும் முக்கியமான விஷயந்தான். கூட்டமா, மகாநாடா, ஊர்கோலமா; நன்கொடை கேட்கத்தானே...''

"அதில்லீங்க. நீங்க பசுபதீஸ்வரர், கோயில் தர்மகர்த்தாவாகணும்னு மனு கொடுத்திங்களா...''

"ஆமாம், ஆமாம்...அது என்னோட பூர்வீக ஊர்லே உள்ள கோயிலு. எனக்கு அந்தக் கோயிலுக்குத் தர்மகர்த்தாவாகி பசுபதீஸ்வரருக்குச் சேவை செய்யணும்னு நெடுநாளா ஆசை...''

"ஒரு பேச்சு என்னிடம் சொல்லப்படாதா ......சரி இருக்கட்டும்...அது உங்களுக்கு வேணும்...''

"ஆமாய்யா, கிடைக்க என்ன வழி, சொல்...'',

"கிடைக்கத்தானேபோகுது அவரு அதுக்காகவேதானே வந்திருக்கிறாரு...''

''யாரு, கமிஷனரா?''

"கமிஷனரை நியமிக்கிற எஜமானரு! கமிஷனர் வந்திருந்தா, அதைப் போயி ஒரு பிரமாதம்னு சொல்ல வந்திருப்பேனா...அவரு வந்திருக்காரு...தலைவரு...''

"அப்படியா...எங்கே...நம்ம மாளிகையிலே அவரோட பாதம்படக் கூடாதா...''

''அவசரமான வேலையா வந்திருக்கிறாரு; சுற்றுலாமாளிகையிலே இருக்கிறாரு. கையோடு அழைத்துக்கொண்டு வரச்சொன்னாரு.''

"என்னையா! என்யா, அவரே சொன்னாரா. என்னை அழைத்துக்கொண்டு வரச்சொல்லி.''

கிளம்பிவிட்டார்கள்! தம்பி! சுற்றுலா மாளிகை அறைக்குள்ளே போய்விட்டார் சீமான். நீயும் நானும் வெளியே இருந்து, அந்த சிரிப்புச் சத்தத்தைத்தான் கேட்க முடிகிறது. அந்த சத்தத்திற்கு என்ன பொருள் தெரியுமா, உனக்கு! பசுபதீஸ்வரருக்குச் சேவை செய்யும் பாக்கியம் கிடைத்துவிட்டது சீமானுக்கு—தேர்தல் நிதி சேர்த்துவிட முடியும் என்ற நம்பிக்கை மண்டலத்துக்கு. பசுபதீஸ்வரரின் மகிமையைச் சொல்ல மறந்துவிட்டேனே முன்னூறு வேலி அயன் நெஞ்சை—நாலு கடைவீதி'—இவ்வளவும் பசுபதீஸ்வரருக்கு, இவ்வளவையும் கவனித்துக்கொள்ளப் போகிறவர் தர்மகர்த்தா.

தம்பி! ஆளுங் கட்சி தேர்தல் நிதி திரட்டுவது கண்டு மலைத்துவிட மாட்டார்கள் யாரும். பயில்வான் வீட்டுக் காளை பயிரை அழித்தால், அடித்து விரட்ட முடியுமா! தேவையான அளவு மேயும்!!

ஆளுங் கட்சி பணம் திரட்டுவதிலே காட்டிடும் ஆர்வத்தை முறியடிக்கத் தக்கவிதமாகக் கழகப் பிரசாரம் மும்முரமாக வேண்டும்.

சென்ற கிழமை நான் குறிப்பிட்டிருந்தேனே. கழகம் பற்றிய உண்மையான தகவலைத் தெரிந்துகொள்ளப் பலர் ஆர்வம் காட்டி வருகின்றனர் என்று. அவர்களில் ஒருவர், "காங்கிரஸ் கட்சி பெரிய தொகை திரட்டுகிறார்களே'' என்று கூறினார். அதிலிருந்து தெரிந்துகொள்ளுங்கள், கழகத்தின் வலிவுபற்றிய கணக்கினை என்று கூறினேன். தம்பி! உன் ஆற்றலை நம்பித்தான் அவ்விதம் கூறினேன், நான் கூறியது தவறல்லவே!!

அண்ணன்,

அண்ணாதுரை

உலக அரங்கில்

அரசியல் என்பது ஏறக்குறைய உழவுத் தொழிலைப்போன்றதுதான். தொழிலாளியின் உழைப்பையெல்லாம் ஏற்றுவளர்ந்த பயிர்கள் பூச்சிப் படையெடுப்புகளினாலும் பருவநிலைக் கோளாறுகளினாலும் அறுவடையில் பொய்த்துப் போகிறதல்லவா? அதுபோல பெருத்த சிரமங்களையும் சிறந்த இராஜதந்திர நடவடிக்கைகளையும் செலவிட்டு உருவாக்கும் சர்வதேச அரசியல் நிகழ்ச்சிகள் பல எதிர்பாராத சூழ்நிலைகளினாலும் திடீர் விளைவுகளினாலும் பொய்த்தும், பட்டும், காய்ந்தும் கருகியும் போயிருக்கின்றன.

அரசியல் மாணவன்

1960 -ம் ஆண்டு மே மாத இறுதி வாரத்தில் பாரிசில் கூடுவதாக இருந்த பெரும் உலகத் தலைவர்கள் உச்ச கட்ட மாநாடு அமெரிக்கா இரஷ்யாவின் மீது அனுப்பிய யு. உ. என்ற வேவுபார்க்கும விமானத்தால் யாருமே எதிர்பார்க்காத வகையில் நடக்காமலே கலைநதது! கருவிலேயே சிதைந்த சிசுவைப் போல. அந்த மாநாடு மட்டும் நடந்திருக்குமானால் ......? என்ற கேள்வி இன்னும் ஏக்கப் பெருமுச்சோடு இன்றும் உலகின் பல மூலைகளில் கேட்கப்படுகிறது. ஆனால் அப்படி நடக்காமல் போகும் என்று எந்த ஒரு அரசியல் வாதியும் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராதது, ஏமாற்றம், திடீர் விளைவு ஆகிய அனைத்தும் கலந்த கூட்டுக் கலவையின் விளைவுதான் அந்த நிகழ்ச்சி.

—இத்திங்கள் இறுதியில் அல்ஜியர்ஸ் நகரில் நடக்க இருந்த ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின மாநாடுகூட 1960-ம் ஆண்டு நடக்காமலே முடிந்த பாரிஸ் சம்மிட்மாநாட்டைப் போன்ற நிலையைத்தான் பெற்றுவிட்டது. அல்ஜீரியாவிலே திடீரென புரட்சி விளைந்து அங்கு போகும் வெளிநாட்டுத் தூதுவாகளுககும் பாதுகாப்பற்ற நிலைமை உருவாகும் எனறு எந்த இராஜதந்திரிதான் எதிபார்த்தார்? பாவம்! சீனாவின் சூ-என்-லாய் இதை முன்கூட்டி அறிந்திருந்தால் ஆப்பிரிக்கக் கண்டமே புழுதிச் சூறுவளியில் ஆழும்படியான ஒரு அரசியல் பயணத்தைக் கடந்த ஓராண்டு காலமாக ஏற்றுக்கொண்டிருக்கமாட்டார். ஐக்கிய அரபுக் குடியரசு நாட்டின் கெய்ரோ ஒரு சந்திப்பு நிலையம் போல அவரை அடிக்கடி தனது விமான நிலையத்தில் இறங்கவும் ஏறவும் வைத்தது.

இந்தோனேஷியாவின் சுகர்ணா எப்படி ஆயத்தமானார்! பங்குபெற்றுவிடுமா சோவியத் யூனியன்? வந்துவிடுமா மலேசியா? என்று எப்படி எப்படி கேள்விகள் கேட்கப்பட்டது. பாகிஸ்தானும் சீனாவும் இந்தோனேஷியாவும் இந்த மாநாட்டுக்காக எந்தெந்த வகைகளிலெல்லாம் தோளோடு தோள் நின்று பாடுபட்டன! பாவம அனைத்தும் வீண்! பருவ நிலைக் கோளாறினால் பொய்த்துப்போன அறுவடையைப்போல் எதிர்பாராத அல்ஜீரியப் புரட்சியினால் அல்ஜியர்ஸ்மாநாடு எதிர்பார்த்தபடி நடக்காமல் நின்றுவிட்டது.

★

வால்டர்லிப்மன் ஒரு உலகமறிந்த அமெரிக்க அரசியல் விமர்சகர். அதுபோல அமெரிக்காவின் நியூயார்க் டைம்ஸ் நாளிதழ் ஏடு சர்வதேச ஏடுகளின் வரிசையில் முன்னணியில் நிற்பது. முன்னவர் பெரும் பெரும் தலைவர்களாலும் அமெரிக்க ஜனாதிபதிகளாலும் ஆலோசனை கேட்கப்படுபவர். பின்னது உலகத் தலைவர்களால் தவறாமல் படிககப்படுவது. இவை இரண்டின எதிர்ப்பையும் தற்போது சந்தித்து வருகிறது ஜானசனின் ஆட்சி. அமெரிககாவின் தெற்கு வியட்நாம் கொள்கையைக் கடுமையாகத் தாக்கியும் வன்மையாகக் கண்டித்தும் விடுவதில் கட்சிக் கட்டுககோப்பையும் மீறி நியூயார்க் டைம்சுமவால்டர்லிப்மனும்பலதிசைகளிலிருந்தும் அமெரிகக அரசியலில் ஆதரவு பெற்று வருகின்றனர்.

ஜான்சனது கட்சியையும் அவரது ஆட்சியையும் தாககிப் பேசியும் எழுதியும் வரும் நியூரிபப்ளிக் ஏட்டின் ஆசிரியர் லிப்மன தெறகு வியட்நாம கொள்கையில் கூறும குறைபாடுகளிலும் நியாயம் இருக்கத்தான செய்கிறது என்று ஒபபுக் கொண்டிருககிறார் சில பல வகைகளில.

வால்டர்லிப்மன் கூறுவது இதுதான். அமெரிக்க உதவியை பலமான நீடிதத ஆட்சி இலலாத நாடுகளுககுத தொடர்ந்து அளிப்பதில் பொருளில்லை. கம்யூனிச ஆதிக்கத்தைத் தடுக்கிறோம் என்று கூறிக்கொண்டு சில நாட்களுக்கு ஒருமுறை தோன்றும் புதிய புதிய அரசுகளை நம்பி தெற்கு வியட்நாமில் அமெரிக்க டாலர்களையும் அமெரிக்க வீரர்களது இரத்தத்தையும் எத்தனையளவு எவ்வளவு நாட்களுக்குச் செலவழித்துக் கொண்டிருப்பது? வியட்நாமே போரில் அழிந்த பிறகு அந்த மக்களுக்கு அந்த நாட்டுக்கும் கொள்கை அடிப்படையில் உதவிகளைக் கொண்டு போய் குவிக்கப் போகிறீர்கள்? கம்யூனிச ஆதிக்கம் பரவுவதைத் தடுப்பது என்பது வேறு; வியட்நாமுக்கு உதவுவது என்பது வேறு. இரண்டும் ஒன்றோடு ஒன்று தொடர்பு படலாமே ஒழிய ஒன்றை ஒன்று பாதிக்கும் அளவுக்குஇருக்கக்கூடாதுஎன்பது லிப்மன் போன்றவர் கருத்து.

இதேகருத்துக்களும் வலுவடைவதோடு ஜான்சனது கட்சியிலுள்ளவர்களே கூட வியட்நாம் கொள்கையில் வேறுபடுகின்றனர். மற்றும் பல நடுநிலைநாளிதழ்கள், கல்லூரிப் பேராசிரியர்கள் மாணவர்கள் இதற்கென்றே தனி அமைப்புகள் ஏற்படுத்தி எதிர்ப்புகள் தெரிவிக்கின்றனர். கடந்த ஈஸ்டர் வார சொணடாட்டத்தின்போது மாணவர்கள் அணி ஒன்று மாபெரும்எதிர்ப்பைத் தெரிவித்தது. அமெரிக்காவில் நிறவேறுபாட்டுப் போராட்டத்துக்கு அடுததபடியாக இந்தப் பிரச்சனையில் பல கட்டங்களிலிருந்து கொள்கை எதிர்ப்பு எழுந்துள்ளது.

—இதில் ஜான்சனது வியட்நாம் கொளகையை எதிர்ப்பவர்கள் அல்லது திருத்தம் வேண்டும் என்போர் அனைவருமே அமெரிக்காவில் கம்யூனிசததுக்கும் அதன் ஆதிக்கத்துக்கும் விரோதமானவர்கள்தான் என்பது குறிப்பிடத்தககது!

இதே நிலையில் சென்றால் அமெரிககா தென்கிழக்கு ஆசியாவில் மற்றொரு கொரியாவைத தோற்றுவித்த குற்றத்துக்கு ஆளாகிவிடும்; பின்னா அதற்கு மற்றொரு மக்ஆர்தர் தேவைப்படலாம்எனறு வெளிப்படையாகவே சில அமெரிக்க இதழ்கள் கண்டிக்கின்றன.

உயிர்ச்சேதமும் பொருள் சேதமும் தவித்த நிலையில் அமெரிக்கா. சீன ஏகாதிபத்தியம் என்றுதான் கருதும் ஒரு வளர்ச்சியைத் தடுக்க முயலுவதுதான் அறிவுடைமை பெருந்தனமை என்று அவர்கள் கருதுவதில் உலக நடுநிலையாளர்களின ஒருமித்த ஆதரவையும் பெறுகிறார்கள்.

*



தும்பைப்பூ

எஸ். எஸ். தென்னரசு

4

“எதற்காக நான் அவரிடம் வாழ்க்கைப்பணம் பெற்றுக்கொண்டிருக்கவேண்டும்? குழந்தை குட்டிகள் இருந்தால் வாழ்க்கைப் பணம் பெறுவதில் பொருள் இருக்கிறது; எதுவுமில்லாத நான் ஏன் அவரிடம் பணம் பெறுகிறேன்? பணம் இல்லாவிட்டால் கெட்டுப்போவேன் என்று கொடுக்கிறார்களோ? நான் அவரை மனப்பூர்வமாக விரும்புகிறேன்; உழைத்துச் சாப்பிட்டால்போகிறது வாழ்க்கைப்பணம் வாங்கிக்கொண்டிருந்தால் ஊரில் இருப்பவர்கள் என்ன நினைத்துக்கொள்வார்கள்? இந்தப் பணத்திற்காகத்தான் குருவம்மா புருஷன்மீது பாசம் இருப்பது போல் நடித்துக்கொண்டிருக்கிறாள் என்று கேலி செய்யமாட்டார்களா” — குருவம்மாவின் மனதில் பூமணலில் தெரியும் பூச்சிக்கால் தடம்போல் லேசாகப் பதிந்திருந்த எண்ணம் அன்று பேயுருவெடுத்து எழுந்துவிட்டது. செண்பகஞ் சேர்வையின் வருகைக்காகவே அவள் காத்திருந்தாள். முனிச்சாலைக்கு வேலைக்குப் போனவன் இரவு ஒன்பது மணிவரை வரவில்லை. வெகு நேரத்திற்குப் பிறகு யாரோ கதவைத் தட்டும் சத்தம் கேட்டது.

குருவம்மா கதவைத் திறந்தாள். “அய்யாவுக்கு முதுவுலே செவரு விழுந்திருச்சி; பெரிய ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போயாச்சு” என்றான் வந்தவன்.

விளக்கணைந்த வீடுபோல் அவள் உள்ளம் குப்பென்று இருண்டுவிட்டது. அடுப்படியில் நின்றவளைப் போல் அவளது மேனி முழுவதும் வியர்வை பூத்தது. ஆற்றுவார், தேற்றுவார்—எல்லாமாக இருந்து வரும் தந்தை இறந்துவிட்டால் என்ன ஆகும் என்கதி? ஒருகணம் குருவம்மா திக்கு முக்காடிப்போனாள் குறுக்குப் பாதையில் ஆற்றுக்குள் விழுந்தடித்து மருத்துவ மனைக்கு ஓடினாள். அங்கே செண்பகஞ்சேர்வைக்கு முதுகில் தையல் போட்டுக் கொண்டிருந்தார்கள். சேர்வையை பார்ப்பதற்கு டாக்டர்கள் குருவம்மாவுக்கு அனுமதிதர மறுத்துவிட்டார்கள். ஆனால் காயம் ஒன்றும் பெரிதல்ல ஒரு மாதத்தில் சரியாகிவிடும் என்று அவர்களே குருவம்மாவுக்கு ஆறுதலும் சொன்னார்கள்.

மறுநாள் காலை குருவம்மா செண்பகஞ்சேர்வையைப் பார்த்து அவனைக் கட்டிக்கொண்டு அழுதாள். அன்று முதல் அவள் ஒவ்வொரு நாளும் மாலைவரை செண்பகத்தின் அருகில் இருந்துவிட்டு இரவு படுக்கைக்கு மட்டும் வீட்டுக்கு வந்தாள். குருவம்மா வீட்டுக்குப் புறப்படும்போதெல்லாம், “பத்திரம்! கதவை நல்லா தாள் போட்டுக்கம்மா!” என்று தொட்டுத் தொட்டு சொல்லியனுப்புவான் செண்பகம்.

குடும்ப கௌரவத்தைப் பாதுகாத்துக்கொள்வதில் செண்பகத்தைக் காட்டிலும் குருவம்மாவுக்கு இரண்டு மடங்கு அக்கறை ஒவ்வொரு நாளும் முகப்புக் கதவை கெட்டியான பூட்டுப்போட்டே பூட்டிக்கொண்டுவிட்டாள் அவள்.

○

பத்து நாட்களுக்குப் பிறகு ஒருநாள் நடுநிசியில் கதவு தட்டும் ஓசை கேட்டது. செண்பகத்திற்குத்தான் எதுவும் நேர்ந்து விட்டதோ என்று திகிலடைந்தது ஓடி வந்து கதவைத்திறந்தாள் குருவம்மா.

என்ன! அவள் எதிர்பாராதது, ஏன்? கனவிலே கூட கண்டிராதது அப்போது நடந்தது. ஆம்! அவளது கணவன் திண்ணையிரம் வாசலில் நின்றான். குருவம்மா கதவைத் திறந்ததும் ரிக்ஷாக்காரன் ஓடிவந்து, “ஐயா கடும் போதையிலே. இருக்காரு! பட்டை!” என்றான் குருவம்மா வெலவெலத்துப் போனாள்.

மனிதமனம் துயரத்தால் மட்டும்தான் அதிர்ச்சியடைகிறதா? ஏன், லாட்டரிச் சீட்டில் இலட்சரூபாய் விழுந்து விட்டால் கூடத்தான் அதிர்ச்சியடைகிறது! குருவம்மாவுக்கு இப்போது ஏற்பட்டுள்ள அதிர்ச்சி எந்த வகையைச் சேர்ந்தது? அவள் முகம் வியர்வையில் ஊறியது.

எதிர் பிளாட்பாரத்தில் பலபேர் கட்டில் போட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார்கள். போலிஸ் வாகனம் ஒன்று அந்த வழியாக கடந்து சென்றது. தூத்துக்குடி, நாகர்கோயில், திருவனந்தபுரம் செல்லும் லாரிகள் கிட்டங்கிகளில் சரக்குகளை ஏற்றிக் கொண்டிருந்தன.

ரிக்ஷாவிலிருந்த திண்ணாயிரத்தை குருவம்மாவும் ரிக்ஷாக்காரனும் தாங்கிப் பிடித்து இறக்கி உள்ளே கொண்டுவந்தார்கள். அவனது சுடுமூச்சி குருவம்மாவின் தோள் பட்டையில் பட்டு வெதுவெதுத்தது. திகைப்பினால், குழப்பத்தினால் அவளது உடம்பெல்லாம துளிர்த்திருந்த வியர்வைத்துளிகள் திண்ணாயிரத்தின் மார்பில், நெற்றியில், கன்னத்தில் தெறித்து உடல் கசகசத்தது.

"குருவம்மா!''

"ம்......ம்!''

"மா......மா......எங்கே போய்ட்டாங்க?''

"ஆசுப்பத்திரியிலே இருக்காங்க!'' அதற்குமேல் பேச அவள் திணறினாள்.

நிம்மதி! அமைதி! ஒன்றை ஒன்று வெட்டும் நேர் கோடுகளைப்போல் அவர்கள் விடும் மூச்சுக்கள் மட்டும் அடிக்கடி குறுக்கிட்டுக்கொண்டன. கொஞ்சநேரத்திற்குப் பிறகு ஏதோ ஒரு ஓசை—தரையைத் தடவும் ஓசை கேட்டது.

"என்ன குருவம்மா! என்ன தேடுறே?''

"ஒன்னுமில்லே, விசிறி தேடுறேன்'' என்று சொல்லி ஒரு தென்னை ஓலை விசிறியால் விசிறினாள்.

மீண்டும் மௌனம்! அடுப்படியில் ஏதோ சத்தம்கேட்டு குருவம்மா எழுந்தாள்.

"பூனைதான், உக்காரு'' என்று சொல்லி திண்ணாயிரம் அவளைத்தன மடிமீது இழுத்துப்போட்டுக்கொண்டான்.

"இப்பத்தான் நெனைப்பு வந்துச்சாக்கும்!'' குருவம்மா கொஞ்சம் இடக்காகப் பேசினாள். திண்ணாயிரம் செல்லமாக அவள் கன்னத்தில் தட்டினான். அவள் பதில்பேசவில்லை. சட்டைப் பையில் கிடந்த தீப்பெட்டியை எடுத்து உரசி அவள் முகத்தருகேகாட்டினான். குருவம்மாவின் கடைக்கண்களில் நீர் பழுத்திருந்தது. திண்ணாயிரம் அவள் தலையைத் தன் நெஞ்சில் அணைத்துக்கொண்டான்.

○

‘குருவம்மா! குருவம்மா! என்ன இப்படித் தூங்கறே!'' குருவம்மா கெட்ட கனவு கண்டவளைப்போல் திடுக்கிட்டு விழித்தாள். எதிரே தயிர்க்காரி நின்றாள்.

"உனக்கு யாரு கதவு தெறந்தது!''

"கதவு தெறந்துதானே கெடந்தது! ராத்திரி தாப்பாப்போட மறந்துட்டியா? ஒரு நாளைப்போல இருக்குமா? கள்ளன் பெரிசா, காப்பான் பெரிசா? தயிர்க்காரி விசனித்துவிட்டுப்போனாள்.

குருவம்மாவுக்குப் பித்துப் பிடித்ததுபோல் இருந்தது.

"தூங்கு! மானாமதுரைக்கிப் போயிட்டு இன்னைக்கி மாதிரி ராத்திரிக்கி வர்றேன்'' என்று விடியற்காலையில் திண்ணாயிரம் சொல்லிவிட்டுப் போனதுபோல் அவளுக்கு நினைவு—அரைகுறை நினைவுதான். அன்றைய பகல் பொழுதுபோவது அவளுக்கு ஒருயுகம் கழிவதுபோல் இருந்தது. எப்படியோ போய்விட்டது.

குருவம்மா மீன் குழம்பு செய்து வைத்தாள். திண்ணாயிரத்துக்கு மீன் குழம்புச் சாப்பாடு என்றால் உயிர்தான்.

அவள், அப்பாவைப் பார்க்க வேண்டாமா! — எண்ணங்கள் ஒன்றை ஒன்று முந்திக்கொண்டு வந்தன. ஒரு ரிக்ஷாவை அமர்த்திக்கொண்டு வேகமாகப் போனாள். ஆனால் போவதற்குள் மருத்துவமனை வாசல் கதவை மூடிவிட்டார்கள். நேரம் கடந்துவிட்டதாம்! அண்ணாந்து பார்த்தாள். மேல் தளத்தில் செண்பகத்தின் அறை ஜன்னல் திறந்திருந்தது. அதைப் பார்த்த குருவம்மாவிக்குத் துக்கம் தொண்டையைக் கவ்வியது.

○

நள்ளிரவு! சிந்தாமணிக் கொட்டகையில் இரண்டாவது காட்சி முடிந்து கூட்டம் அலை அலையாகப் பிரிந்துகொண்டிருந்தது.

குருவம்மா வாசல் திண்ணையில் உட்கார்ந்துகொண்டு ஒவ்வொரு ரிக்ஷாவையும் கூர்ந்து பார்த்தாள். மணியாடரை எதிர்பார்க்கும் கல்லூரி மாணவனைப்போல் தாகமும் பின் தளர்ச்சியுமாக அவள் மனம் மாறி மாறிப் புரண்டது

“அவர் வரமாட்டாரோ! எவ்வளவு களைத்துப் போய்விட்டார்! ஆறு மாசங்கள்கூட ஆகல்லியே அதுக்குள்ளாக இப்படிப் போயிட்டாரே!” குருவம்மா இப்படி எண்ணிக்கொண்டிருக்கும்போதே ஒரு குதிரை வண்டியில் வந்து இறங்கினான் திண்ணாயிரம். நேற்றைப்போல் திண்ணாயிரம் இன்று குடிவெறியில் இல்லை நிதானமாக இருந்தான். வண்டியிலிருந்த பழக்கூடையையும் துணி பொட்டலத்தையும் வண்டிக்காரன் எடுத்து வந்தான்.

“குருவம்மா இதை வாங்கிக்க!”

“எல்லாம் சாப்புட்டுப் பேசலாம் உள்ளே வாங்க!”

சின்னக் குழந்தையைப்போல் திண்ணாயிரம் குருவம்மாவைப் பின்தொடர்ந்து போனான்.

“ஏன் இவ்வளவு நேரமாம்!”

“ஜட்கா கெடெச்சாத்தானே! சினிமா வுட்ற நேரம் — அதாலே ஒருத்தனும் அகட்படலே! அது சரி; மாமாவுக்கு எப்படி இருக்கு? பாத்தியா? திண்ணாயிரத்தின் விசாரணையில்தான் எவ்வளவு அனுதாப உணர்ச்சி!

‘போனேன்; ஆனா அப்பாவைத்தான் பாக்க முடியல்லே! நேரமாச்சுன்னு கேட்டைச் சாத்திட்டாங்க. நாளைக்கித்தான் போகணும். நீங்க அப்பாவைப் பாக்க வேணாமா?

“பாக்காமலா இருப்பேன்! ஆனா ஒன்னு குருவம்மா, நான் போயி மாமாவைப் பாக்கிறவரைக்கும நீ ஒன்றும் சொல்லிடாதே! ஒன்னைத்தான் கோவிச்சுக்குவாரு! பாரு, என்ன இருந்தாலும் புருஷன் வந்ததும் என்னெ ஒரு வார்த்தை கேக்காம சோறுசமைச்சுப் போட்டுட்டாளேன்று நெனைப்பாரு! நானாப்போயி பாக்கிற மாதிரிப் பாத்துட்டு வந்துட்டா எல்லாஞ்சரியாப்போயிடும்” திண்ணாயிரம் எவ்வளவு உரிமையோடு சொன்னான் தெரியுமா?

“நானும் அதுமாதிரித்தான் நெனைச்சேன். அப்பாகிட்டே எப்படித்தான் இதைச் சொல்றதுன்னு இன்னிக்கிப்பூரா யோசிச்சுககிட்டே இருந்தேன்” என்றாள் குருவம்மா.

“இந்தா உனக்குப் பொடவை! நாளைககே நீ கட்டிக்கணும்!” என்றான் திண்ணாயிரம்.

“உஹூம்! மாட்டேன். அப்பா ஏது பொடவையின்னு கேப்பாரு!”

“அவரு ஆஸ்பத்திரியிலேயிருந்து வந்துதானே கேக்கணும்! அதுக்குள்ளேதான் அவரைப் போயிப் பாத்து ராசியாயிருவேனே?”

குருவம்மா மெல்லச் சிரித்தாள். அந்தச் சிரிப்பு, புருஷன் சிறந்த புத்திசாலி என்று அவளுக்குள்ளே நினைத்துக்கொள்வது போலிருந்தது.

குருவம்மா மீன் குழம்புச் சோறு படைத்தாள். சுவை தரும் பொற்கரத்தால் திண்ணாயிரம் உணவுண்டான்.

“குருவம்மா, நேற்று என்ன தேதி தெரியுமா?” திண்ணாயிரம் வியப்போடு கேட்டான்.

“நான் எதைக் கண்டேன்?” குருவம்மா சொன்னாள்.

“ஆவணி ஆறு! மூனு வருஷங்களுக்கு முன்னாலே இந்த ஆவணி ஆறிலேதான் நமக்குக் கல்யாணம்! தெரிஞ்சுதா?” திண்ணாயிரத்தின் குரலில் உணர்ச்சி பொங்கியது.

குருவம்மா திருமண நாளன்று இரவு எவ்வளவு குதூகலமாக இருந்தாளோ அதைவிடக் குதூகலமாக அவள் நேற்று இரவைக் கழித்திருக்கிறாள். இழந்ததைப் பெற்றுவிட்ட இன்பப் பெருக்கு — வெற்றிப் பெருக்கு அவளுக்கு! அதே பெண்; அதே மாப்பிள்ளை! ஆனால் இரண்டாவது கல்யாணம்; இரண்டாவது முதலிரவு! தமிழ் நாட்டுப் பெண்களுக்கு ஒரே ஒரு முதலிரவுதான் இருக்க முடியும்! ஆனால் குருவம்மாவுக்கு மட்டும் இரண்டு முதலிரவுகள்! கணவன் வருவானென்று அவளுக்கு மட்டும் நேற்று முன்கூட்டியே தெரிந்திருந்தால் மல்லிகையும், முல்லையும் தலைமகிழச் சூடிக்கொண்டிருக்க மாட்டாளா? அதனால்தான் இன்று எதுவும் குறையில்லாமல் சேகரித்து வைத்திருக்கிறாளோ? முடியில் முல்லைச் சரம்! சன்னல் குழியில் ஜவ்வாதுப் பத்தி! உரியில் பாலும், பழமும்! பாவம்! அணையை உடைக்கப்போகும் புது வெள்ளம்போல் அவள் மனம் நிறைந்து கசிந்து கொண்டிருந்தது. பாதுகாப்பில்லாத இளமை இற்றுப்போன பட்டுத் துணியைப் போன்றது. அடிக்கடி கவனித்துக்கொள்ள வேண்டும். அது எப்போது கிழியும் என்று சொல்லமுடியாது,

அன்று இரவு காளி கோயில் பூசை அறையைப்போல் வீடு முழுவதும் பூவாடையும், பத்திவாடையும் நீக்கமற நிறைந்து மணம் பரப்பின.

“குருவம்மா!”

“ம்......ம்!”

“மணி என்ன இருக்கும்?”

“கோழி கூவிடுச்சே!”

“சரி, நான் போகட்டுமா? மானா மதுரைக்கி போற சட்டில் போயிடப் போகுது!”

“ஏனாம்! இருந்து அப்பாவைப் பாக்க வேணாமா?”

“அதுக்குனு முறை இருக்கு குருவம்மா! வேட்டி, பழம் எல்லாம் வாங்கிட்டு நாளைக்கி வாரேன்” திண்ணபிரம் நயந்து சொன்னான்.

“அத்தான், இந்த மாதிரி ராத்திரி வேளையிலே வந்துக்கிட்டே இருந்தா யாரும் எதுவும் நம்மை சொல்ல மாட்டாங்களா?”

“புருஷன் பெண்ஜாதி எப்படி இருந்தா என்ன? பேசட்டுமே!”

“அதுக்குச் சொல்லல்லியே! வர்ரது நீங்கதான்னு எப்படி அவங்க தெரிஞ்சுக்குவாங்க! அதாலேதான் சொன்னேன்” குருவம்மா கெஞ்சினாள்.

“ஹோ! அதுக்குச் செரில்றீயா? எல்லாம் இந்தமாசத்திற்குள்ளேயே சரியாயிடும்” என்று சொல்லிவிட்டு திண்ணாயிரம் விடைபெற்றுக் கொண்டான்.

குருவம்மா வாசலில் நின்று அவன் தலை மறையும்வரை பார்த்துக்கொண்டிருந்தாள். திடீரென்று அவளுக்கொரு பயம் வந்தது இப்போது யாரும் வீட்டுக்குள் வந்து பூவையும், புதுப் புடவையையும், பழக் கூடையையும் பார்த்துவிட்டால் என்னாவது என்று அவள் துணுக்குற்று உள்ளே ஓடினாள். ஆனால் அவளுக்குப் பின்னாடியே தயிர்க்காரி நுழைந்ததைக் குருவம்மா கவனித்தாளா?

ஜூலை
வெளியீடு !...



முருகன்
புரொடக்ஷன்ஸ்
அளிக்கும்...

வீரவாள்

வசனம்... S.M.சந்தானம் ★ பாடல்கள்... கவிஞர் முடியரசன் ★ இசை... T.பத்மன்

டைரக்ஷன் ... **S.V.மகேஷ்**

Arts & Coy.

தயாரிப்பு ... **N.N.முருகையன்**

சின்ன காஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், உரிமையாளர் சி. என். ஏ. இளங்கோவனால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது. ஆசிரியர் சி. என. அண்ணாதுரை.